Number
in the list of Applicants

**MEDIA ACCREDITATION FORM (PROVINCIAL JOURNALIST-2020/2021)**

DEPARTMENT OF GOVERNMENT INFORMATION

**Please refer the guidelines and Gazette notification (12/12/2020-No.2205/17) before complete this.**

**1.**Name in full (Mr./Mrs./Miss)
**(In Block Letters/ Maintain word spacing )**

**2.** Preferred Name on Accreditation Card

**3.** National Identity Card No

**4.** Date of Birth: Year Month Date

**5.** Name of the Media Organization

**6.** Name of the Paper/TV/Radio

TV Radio News paper

**7.**Job Title/Post

8. Covering i. District

ii. Area

Full Time Part Time

9. What is the full time job ……………………………………………………………………………

10. Previous Accreditation No Year

Office Use Only:

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
…………………………………………………………………………

← 1” →
1 ½”
Photo

Acc.Card No 2021/

11.Address (Office)

Telephone No

Fax No

l

12. Address (Residence)

Telephone No

Mobile No

Personal e-mail

**I hereby declare that the above details furnished by me are true and correct and I do further admit that in the event of any particulars found false or incorrect the Director General of Govt. Information has all the rights to withdraw or cancel the media accreditation card issued to me under his signature.**

…………………………… Signature of Applicant

…..................... Date

**Note:**

**Name and media institute of the media personal will be published on official website of the Department of Government Information www.dgi.gov.lk and Govt. news portal www.news.lk**

This Application Should accompany a letter of request from head of the organization

## For Office Use Only

…………………………………………………………………………………………………………………

Recommended:…………………….

Approved ………………………………………. (DGI)

Department of Government Information. Press Accreditation Division, No.163, Kirulapona Road, Colombo

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

**අංක 2205/17 - 2020 දෙසැම්බර් මස 12 වැනි සෙනසුරාදා - 2020.12.12**

*2205/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க தகவல் திணைக்களம்**

*2021 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டைகளை விநியோகித்தல்*

''சௌபாக்கிய தொலைநோக்கு'' அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக ஊடக நிறுவனங்கள் மற்றும் அங்கே சேவை புரியும் தொழில் வல்லுநர்களின் செயற்பாடுகளுக்கு அவசியமான குழப்பமற்ற அமைதியான சூழல் ஒன்றை உருவாக்குவது அரசின் பொறுப்பாகக் கருதப்படும். இதற்கமைவாக சிறந்த மற்றும் தரமான ஊடக கலாசாரத்திற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தினால் தொழில் ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுவது ஊடகவியலாளர்களின் தொழில் தரத்தை சிறப்பானதாக மேம்படுத்தி அவர்களது தொழிலின் கௌரவத்தைபாதுகாத்து, கடமைகளை எந்தவித தடையும் இன்றி நிறைவேற்றுவதற்காகும்.

செய்தி மற்றும் தகவல்களைத் திரட்டும், அந்தத் தகவல்களைத் தொகுக்கும், வழங்கும் தகவல்களை இலத்திரனியல் அச்சு அல்லது இணையத்தளம் மூலம் வாசகர்களுக்கு/நேயர்களுக்கு தொடர்பாடல்களை மேற்கொள்ளுபவர் செய்திகலைஞர்/ஊடகவியலாளர் ஒருவர் என்றரீதியில் ஊடக அடையாள அட்டையை வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும். ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படுவது இந்தப் பணியில் ஈடுபடும் தொழில் ரீதியிலான ஊடகவியலாளருக்கு மாத்திரமாகும்.

இந்த அடையாளஅட்டை தொழில் ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் வழங்குவதற்காக சிபாரிசுகளை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் மற்றும் செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவின் தலைமை அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம்.


1A - G 33326 — 70 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளுவதற்காக ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் பெயர் பட்டியல் தொடர்பில் முழுமையான பொறுப்பு அதனை உறுதி செய்யும் ஊடக நிறுவனங்களின் பிரதானி/செய்தி பணிப்பாளர்/பிரதம ஆசிரியர் அல்லது சம்பந்தப்பட்ட ஊடக நிறுவன அதிகாரிகளை சார்ந்ததாகும்.

இந்த ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்குத் தேவையான கடித ஆவணம் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தவேண்டும்.

**அச்சு ஊடகம்**

| | | |
|---|---|---|
| 01. | நிறுவனமயப்படுத்தப்பட்ட/அலுவலக ஊடகவியலாளர் (Journalist) | - இல.01 மற்றும் இல. 02 |
| 02. | புகைப்பட ஊடக வியலாளர் (Photo Journalist) | - இல.01 மற்றும் இல. 02 |
| 03. | பிராந்திய ஊடகவியலாளர் (Journalist-PJ) | - இல.03 |
| 04. | சுதந்திர ஊடகவியலாளர் (Freelance Journalist) | - இல.04 |
| 05. | ஊடக நிர்வாகி (Media Administrator) | - இல. 07 |
| 06. | ஊடக சேவை (Media Service) | - இல. 01 மற்றும் 09 |

**இலத்திரனியல் ஊடகம்**

| | | |
|---|---|---|
| 01. | தொலைக்காட்சி ஊடகவியலாளர் (TV Journalist) | - இல. 01 மற்றும் 02 |
| 02. | வானொலி ஊடகவியலாளர் (Radio Journalist) | - இல. 01 மற்றும் 02 |
| 03. | தொலைக்காட்சி புகைப்பட ஊடக வியலாளர் (TV Camera Journalist) | - இல. 01 மற்றும் 02 |
| 04. | தொகுப்பாளர் (Presenter) | - இல. 01 மற்றும் 06 |
| 05. | ஊடக நிர்வாகி (Media Administrator) | - இல. 01 மற்றும் 07 |
| 06. | தொழில்நுட்ப கலைஞர் (Technical) | - இல. 01 மற்றும் 08 |
| 07. | ஊடக சேவை (Media Service) | - இல.01 மற்றும் 09 |
| 08. | இணையத்தள ஊடகவியலாளர் (Web Journalist) | - இல. 10 |

**அரசாங்க ஊடக அதிகாரிகள்**

| | | |
|---|---|---|
| 1. | அமைச்சின் ஊடக அதிகாரி (Media official) | - இல. 05 |
| 2. | ஊடக சேவை (Media Service) | - இல. 09 |

**வெளிநாட்டு ஊடகவியலாளர்** (Foreign Media)

| | | |
|---|---|---|
| 1. | வெளிநாட்டு ஊடக நிறுவனத்தின் சார்பில் பணியாற்றும் உள்ளூர் பிரதிநிதிகள் Foreign Media | - இல. 11 |
| 2. | தற்காலிகமாக நாட்டுக்கு வருகைதரும் ஊடகவியலாளர்கள் Foreign Media (Temporary) | - இல. 11 |

**01. அடிப்படை விடயங்கள் மற்றும் தேவையான கடித ஆவணங்கள்**

(i) அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிறுவனத்தில் நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையிலான ஊடகவியலாளர் என்ற ரீதியில் ஆகக் குறைந்தது 6 மாதகாலத்திற்கு மேற்பட்டகாலம் சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். (பயிற்சி அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.)

(ii) சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரின் பெயர்ப்பட்டியல் பின்வரும் படிவத்திற்கு அமைவாக தயாரித்து ஊடக அடையாள அட்டையை வழங்குமாறு கோரும் கடிதம் மற்றும் பெயர்ப்பட்டியலில் நிறுவனத்தின் கடித மேல் உறையின் கீழ் ஊடக நிறுவனத்தின் பிரதானி/ ஊடகபணிப்பாளர் நாயகம் /தலைமை நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் /பிரதம ஆசிரியர் /செய்தி ஆசிரியர் /

செய்திப் பணிப்பாளர்/ பிரதம செய்தி தொகுப்பாளரினால் உங்களுக்குச் சொந்தமாயின், பெயர் பதவி கையெழுத்துடன் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையுடன் உறுதிசெய்து அரசாங்க தகவல் திணைக்களபணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

| தொடர் இலக்கம் | பெயர் | தே. அ. இலக்கம் | பதவி | கடமையாற்றும் பிரிவு |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

(iii) பெயர் பட்டியலின் அனைத்து பக்கங்களிலும் ஊடக அடையாள அட்டையை வழங்குமாறு கோரப்படும் கடிதம் உறுதி செய்பவரினால் கையெழுத்திட்டு உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையை இட்டு உறுதிசெய்தல் வேண்டும்.

(iv) பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பதவியை உறுதி செய்வதற்காக ஊடக நிறுவனத்தினால் வழங்கப்படும் அலுவலக அடையாள அட்டையின் புகைப்பட பிரதியின் பெயர் பட்டியலை உறுதிசெய்பவரின் பெயர்,பதவி,கையெழுத்து மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையை இட்டு உறுதிசெய்யப்பட்ட பிரதியாக உறுதி செய்யப்படவேண்டும்.

(v) அலுவலக அட்டையைச் சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் தமது நியமனக் கடிதத்தின் பிரதி ஒன்றை பெயர் ஆவணத்தை உறுதி செய்தவரினால் பெயர் பதவி, கையெழுத்துடன் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையைப் பதித்து உறுதி செய்யவேண்டும்.

(vi) அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.dgi.gov.lk) அல்லது அரசாங்க உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.news.lk) மூலம் 2021 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப் படிவத்தைத் தரவிறக்கம் செய்துகொள்ளமுடியும்.

(vii) மொத்த பெயர் பட்டியலுக்கு மேலதிகமாக தனித்தனியான ரீதியில் அனைத்து விண்ணப்பப்படிவங்களும் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்/தலைமை நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்/பிரதம ஆசிரியர்/செய்தி ஆசிரியர்/ செய்தி பணிப்பாளர்/செய்தி முகாமையாளர்/பிரதான செய்தி தொகுப்பாளரினால் கைச்சாத்திடப்படுவதுடன் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையையிட்டு உறுதிசெய்யப்படுவது அவசியமாகும்.

(Viii) 06 மாதகாலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட1x1½inch (2.6cmx3.7cm)அளவிலான தெளிவான நிறப் புகைப்படங்கள் இரண்டுடன் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும். இந்த அளவிலும் பார்க்க சிறிய அளவிலான புகைப்படம் நிராகரிக்கப்படும். ஒருபுகைப்படம் விண்ணப்படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழன்று போகாதவகையில் ஒட்டப்படவேண்டும்.

(ix) 2021 ஆம் ஆண்டுக்குள் வழங்கப்படும் ஊடக அடையாள அட்டைகளின் செல்லுபடியான காலம் டிசம்பர் மாதம் 31 ஆந்திகதியுடன் நிறைவடையும்.

**02. நிறுவனமயப்படுத்தப்பட்ட/அலுவலக ஊடகவியலாளர்கள்**

அச்சு மற்றும் இலத்திரனியல்துறை ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலக ஊடகவியலாளர்களுக்காக மேலே குறிப்பிடப்பட்ட இலக்கம் 01 இல் இருந்து (i) – (viii) வரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்திசெய்தல் வேண்டும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தள ஊடகவியலாளர்கள் மற்றும் புகைப்பட/காணொளி புகைப்பட ஊடகவியலாளர்கள் இந்தப் பிரிவிற்கு உட்பட்டவர்கள்.

**03. பிராந்திய ஊடகவியலாளர்கள்**

(i) 2020/2021 ஆகிய இரண்டு வருடங்களுக்காக அதாவது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந்திகதி வரையில் செல்லுபடியான வகையில் பிரதேச ஊடகவியலாளர்களுக்காக ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில்

விண்ணப்பிக்காத மற்றும் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பபடிவத்துடன் தேசிய அடையாள அட்டை/செல்லுபடியான கடவுச்சீட்டு/வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தின் தெளிவான பிரதியை அனுப்ப வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) பிராந்திய ஊடகவியலாளர்களின் பெயர் பட்டியலுக்கு ஏற்ப ஊடக நிறுவனத்தினால் மாவட்டமட்டத்தில் தனியாகக்கீழ் கண்ட தகவல்களுடன் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும்:

(அ) ஊடகவியலாளரின் பெயர்;

(ஆ) தேசிய அடையாள அட்டை இலக்கம்;

(இ) நிரந்தர முகவரி;

(ஈ) செய்திகளை சேகரிக்கும் மாவட்டம் மற்றும் பிரதேசம்;

(உ) ஊடகவியலாளரின் தொலைபேசி இலக்கம்,

(iii) தமது நிறுவனத்தில் பிராந்திய செய்தியாளர்களின் பெயர் பட்டியல், ஊடக நிறுவனத்தின் பிரதானி/பணிப்பாளர் நாயகம்/தலைமை நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்/செய்திப் பணிப்பாளர்/பிரதான செய்தித் தொகுப்பாளர்/பிரதேச செய்தித் தொகுப்பாளரினால் பெயர், பதவி, கையெழுத்து மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையுடன் உறுதி செய்யப்பட்டு அரசாங்கதகவல் திணைக்களப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கவேண்டும். இந்தப் பெயர்ப் பட்டியலின் அனைத்து பக்கங்களும் பெயர் பட்டியலை உறுதி செய்தவரினால் தமது கையெழுத்து மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையை இட்டு உறுதி செய்யவேண்டும்.

(iv) இந்தப் பெயர் பட்டியலின் முதல் பக்கம் மற்றும் மென் பொருள் பிரதி (Soft Copy) தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மென் பொருள் பிரதி Media.accre@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் பொழுது அன்றைய தினத்திற்குமுன் 6 மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட 1x1½inch (2.6cmx3.7cm) அளவிலான தெளிவான நிறப் புகைப்படங்கள் இரண்டுடன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். இந்த அளவிலும் பார்க்க சிறிய அளவிலான புகைப்படம் நிராகரிக்கப்படும். ஒரு புகைப்படம் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழன்றுபோகாத வகையில் ஒட்டப்படவேண்டும்.

(vi) தற்பொழுது செய்திகளை வழங்கும் நடைமுறை ஊடகவியலாளரின் பெயர் மாத்திரம் பெயர் பட்டியலில் உள்ளடக்குமாறு ஊடக நிறுவன பிரதானி/தலைமை பிரதம ஆசிரியர்/செய்திப் பணிப்பாளர்/பிராந்திய செய்தி ஆசிரியர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

(vii) சம்பந்தப்பட்ட படிவத்தை (www.dgi.gov.lk) அல்லது (www.news.lk) என்ற இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்வதுடன் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பம், "அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இலக்கம் 163, கிருலப்பனை மாவத்தை,கொழும்பு 05" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

(viii) விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிராந்திய ஊடகவியலாளர் அடையாள அட்டை" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

**04. சுதந்திர ஊடகவியலாளர்கள்** (Freelance Journalists)

ஆகக்குறைந்தது ஒருவருட காலம் தொடர்ச்சியாக சுதந்திர ஊடகவியலாளராக தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகம் ஒன்றில் பணியாற்றியிருக்கவேண்டும். அத்தோடு அதனை உறுதிசெய்வதற்கு பின்வருவனவற்றில் தேவையானவற்றை சமர்ப்பிக்கவேண்டும்:-

(i) விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் தினத்திற்கு முன்னர் 6 மாதகாலத்திற்குள் தன்னால் வெளியிடப்பட்ட செய்தி மற்றும் நடப்பு விவகாரம் தொடர்பான செய்தி/ விசேடதொகுப்பு/ஆக்கங்கள் முதலானவற்றில் ஆகக் குறைந்தது 12 க்குக் குறையாத எண்ணிக்கையிலான ஆவணங்களின் உறுதிசெய்த பிரதிகள் அல்லது இறுவட்டுக்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(ii) செய்தி, விசேடகட்டுரை, நடப்பு விவகார நிகழ்வுகள் வழங்கப்பட்ட அச்சு அல்லது இலத்திரனியல் ஊடக நிறுவனத்திடம் இருந்து ஆகக்குறைந்தது ஒரு நிறுவனத்தின் அல்லது தமது ஊடக நிறுவனத்திடம் தொடர்ச்சியாக செய்தி அல்லது நிகழ்ச்சி நிரல்களை வழங்குவதாக அந்த நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்ட அஞ்சல் தாளில் (Letterhead) உறுதிசெய்யப்பட்டகடிதம் ஒன்றின் மூலம் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு சுதந்திர ஊடகவியலாளருக்கான அடையாள அட்டையை வழங்குமாறு கோரும் கடித்தை சமர்ப்பிக்க வேண்டும். இது ஊடக நிறுவன பிரதானி/ செய்திப் பணிப்பாளர்/ செய்தி தொகுப்பாளரின் பெயர், கையெழுத்துடன் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையிடப்பட்டு உறுதிசெய்யப்படல் வேண்டும்.

**05. அரசாங்க ஊடக அதிகாரிகள்**

(i) அரசாங்க அமைச்சு/ திணைக்களம்/ அரசாங்க நிறுவனங்களில் நேரடியாக ஊடக பதவிக்கான உத்தியோகபூர்வ நியமன கடிதத்துடன் ஊடக செயலாளர், ஊடகப் பணிப்பாளர்/செய்தி பணிப்பாளர்/ஊடக அதிகாரி/புகைப்படக் கலைஞர்/காணொளி புகைப்பட கலைஞர்/ஊடக உதவியாளர் ஆகிய பதவிகளை வகிப்பவர்களுக்கு பதவிக்கான தரத்திற்கு அமைவாக ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் தமது அமைச்சில் அல்லது அமைச்சுக்கு உட்பட்டதாக உள்ள நிறுவனத்தில் ஊடக கடமைகளில் ஈடுபட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட பதவி ஊழியர்களுக்கான அடையாள அட்டைக்கு சம்பந்தப்பட்ட பெயர் மற்றும் பதவியை உறுதிசெய்து அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் கோரும் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஆவணத்தின் முழுமையான பொறுப்பு அந்த ஆவணத்தை உறுதி செய்யும் அமைச்சின் செயலாளர் /மேலதிக செயலாளரை சார்ந்ததாகும்.

(iii) இந்த கோரிக்கைக்கான கடிதம் சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்டு அஞ்சல் தாள் கடிதத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தோடு அவ்வாறு இல்லாத பட்சத்தில் முன்வைக்கப்படும் கோரிக்கைக்கான கடிதம் நிராகரிக்கப்படும்.

(iv) ஊடக பிரிவுகளில் பணியாற்றும் மேலே குறிப்பிடப்பட்ட பதவியை தவிர்ந்த ஏனைய பதவிகளை வகிப்போருக்கு ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படமாட்டாது.

(v) அமைச்சின் கீழ் உள்ள அரசாங்கம் சார்ந்த ஊடக பிரிவிற்கான அல்லது நியதிச் சபை ஊடக அடையாள அட்டையை கோரும் பொழுது அந்த ஊடகத்தின் பணிப்பாளர் நாயகம் பொது முகாமையாளரினால் பெயர் பட்டியல் மற்றும் விண்ணப்பப்படிவம், பெயர், பதவியுடன் இலச்சினை முத்திரையுடன் உறுதி செய்யப்படவேண்டும்.

**06. அங்கீகரிக்கப்பட்ட அறிவிப்பாளர் (ஒலிபரப்பாளர்)**

(i) அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிறுவனம் ஒன்றில் கடமையில் ஈடுபட்டுள்ள செய்தி மற்றும் நடப்பு ஊடக நிகழ்ச்சியை சமர்ப்பிக்கும் அறிவிப்பாளர்களுக்கான ஒலிபரப்புக்கான அடையாள அட்டை வழங்கப்படும்.

(ii) மேலே இலக்கம் (01) இல் குறிப்பிடப்பட்ட அனைத்து தேவைகளையும் ஒலிபரப்பாளர் அடையாள அட்டைக்காக விண்ணபிப்பவரினால் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

**07. ஊடக நிர்வாகிகள்**

(i) தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிர்வாகத்தில் நேரடியாக பங்களிப்பு செய்யும் ஊடக நிர்வாகிகளுக்காக ஆகக்கூடிய வகையில் ஒரு ஊடக நிறுவனத்திற்கு மூவருக்கு மாத்திரம் ஊடக நிர்வாக அடையாள அட்டை வழங்கப்படும்.

(ii) ஊடக நிறுவனத்தில் விற்பனை மேம்பாட்டு பணிப்பாளர்கள்/முகாமையாளர்கள்/சேமநல அதிகாரிகள் அல்லது விற்பனை மேம்பாட்டுதுறையில் பணியாற்றும் ஏனைய அதிகாரிகளுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

**08. ஊடக தொழில்நுட்ப கலைஞர்கள்**

(i) இத்துறை ஊடக கடமைகளில் நேரடியாக ஈடுபடும் இலத்திரனியல் ஊடக துறையின் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு ஊடக தொழில்நுட்ப கலைஞர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்படும்.

(ii) மேற்குறிப்பிட்ட இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட அனைத்து தேவைகளையும் ஊடக தொழில்நுட்பகலைஞர் அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்போரினால் முழுமைப்படுத்தப்படல் வேண்டும்.

**09. ஊடக சேவை**

(i) செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவுகளில் ஊடக நடவடிக்கைகளுக்காக நிறுவனத்திற்கு அப்பாலான துறைகளில் ஊடக நடவடிக்கைகளில் நேரடியாக பங்கு கொள்வோருக்காக ஊடக சேவை அடையாள அட்டை வழங்கப்படும்.

(ii) மேற்குறிப்பிட்ட இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட அனைத்து தேவைகளையும் ஊடக சேவை அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்போரினால் முழுமைப்படுத்தப்படல் வேண்டும்.

**10. இணையத்தள ஊடகவியலாளர்கள்**

(i) ஊடக அடையாள அட்டையை விநியோகிக்கும் உரிய அதிகாரியான அரசாங்கதகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் விசேடகுழுவின் கண்காணிப்பு மற்றும் சிபாரிசின் அடிப்படையில் இணையத்தளத்திற்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்குவது கவனத்தில் கொள்ளப்படும்.

(ii) இணையத்தளத்திற்கு ஊடக அடையாள அட்டையை வழங்கும் போது சம்பந்தப்பட்ட இணையத்தளத்தின் பயன்பாடு, நோக்கம், பார்வையிடுபவரின் எண்ணிக்கை (Number & Hits) மற்றும் நாளாந்தம் புதுப்பித்தல் (Update) ஆகிய விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(iii) சம்பந்தப்பட்ட இணையத்தளம் 2020-2021 ஆம் ஆண்டுக்காக வெகுஜன ஊடகவிடயத்துக்கு பொறுப்பானஅமைச்சில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வெகுஜன ஊடகதுறை அமைச்சின் விடயதானத்துக்கு பொறுப்பான சபை அதிகாரி ஒருவரினால் உறுதிசெய்யப்பட்ட அந்த பதிவுசான்றிதழின் பிரதி ஒன்று ஊடகவியலாளர் அடையாள அட்டைக்கான விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும் வெகுஜன ஊடகவிடயதான பொறுப்புஅமைச்சில் இணையத் தளபதிவு சான்றிதழை பெற்றிருப்பது மாத்திரமன்றி ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(iv) ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் அனைத்து செய்தி, இணையத்தள ஊடக நிறுவனமாக வர்த்தகபதிவு (Business Registration) பெற்றிருப்பதுடன் இந்த வர்த்தக பதிவுசான்றிதழில் உறுதி செய்யப்பட்ட பிரதியை சமர்ப்பிக்க வேண்டும். வர்த்தகபதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் சபை அதிகாரி ஒருவரினால் பெயர், கையெழுத்துடன் இலட்சினை முத்திரையுடன் அது உறுதி செய்யப்படல் வேண்டும்.

(v) இணையத் தளத்துக்காக ஊடக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பில் மேலும் தகவல்களை உறுதிசெய்து கொள்வதற்கு தேவை என உணரப்படும் பட்சத்தில் அவ்வாறான விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

(vi) ஊடக அடையாள அட்டை வழங்குவதற்காக ஆகக்குறைந்தது 6 மாதகாலம் நாளாந்தம் மற்றும் தொடர்ச்சியாகசெயற்படும் இணையத்தளமாக இருப்பதுடன் இந்த இணையத்தளங்கள் ஆகக் குறைந்தவகையில் 35 சதவீதமான வகையில் செய்தி மற்றும் நடப்பு தகவல்களை உள்ளடக்கியிருப்பது கட்டாயமானதாகும். செய்தி இணையத்தளம் ஆகக்குறைந்த 30 செய்திகளையாவது வெளியிட்டிருக்க வேண்டும்.

(vii) இணையத்தள ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது ஊடக சித்தாந்தங்களை கடைப்பிடித்து பொதுமக்களின் சேமநலனுக்காக உண்மையான, சரியான மற்றும் காலநடப்பு செய்திகளை வழங்கும் இணையத்தளத்திற்கு மாத்திரமேயாகும்.

(viii) ஒருநபர் அல்லது நிறுவனத்துக்கு உட்பட்டதாக இணையத்தளங்கள் பல பதிவு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு இணையத்தளத்திற்கு மாத்திரம் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

(ix) இணையத்தள ஊடக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளருக்கு மாத்திரம் ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் இணையதள தலைவர்/இணையதள நிர்வாகி/கவனர்/பணிப்பாளர் உள்ளிட்ட வெளிப் பதவிகளை வகிப்போருக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

(x) இணையத்தள ஊடக அடையாள அட்டை ஒன்று வழங்கப்படுவது நேரடி செய்தி இணையத்தளத்திற்காக மாத்திரமாவதுடன். ஏனைய நிறுவன இணையத்தள நிறுவனங்களுக்கு ஊடக அடையாள அட்டையும் வழங்கப்படமாட்டாது.

**11. வெளிநாட்டு ஊடகம்**

* **நிரந்தரம்**

(i) சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு ஊடக நிறுவனங்களின் இலங்கை பிரதிநிதிகள்/செய்தியாளர்களாக இந்த நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட நிரந்தர ரீதியில் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தில் கடமை புரியும் அலுவலக ஊடகவியலாளருக்காக மாத்திரம் இந்த அடையாள அட்டை வழங்கப்படும்.

(ii) ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது இந்த வெளிநாட்டு ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் உறுதி செய்யப்பட்ட பின்னரே ஆகும்.

*தேவையான கடித ஆவணங்கள்*

(i) விண்ணப்பதாரர் தமது ஊடக நிறுவனத்தில் கடமையாற்றுவதாக வெளிநாட்டு ஊடக நிறுவனத்தின் தலைமை அதிகாரியினால் உறுதி செய்யப்பட்ட கடிதம்.

(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு/தேசிய அடையாள அட்டைபிரதி.

(iii) ஆறு மாதகாலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட 1x1½inch (2.6cmx3.7cm)அளவிலான இரண்டு நிறப் புகைப்படங்கள் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிப்பதுடன் இதில் ஒருபுகைப்படத்தில் விண்ணப்பப் படிவத்தில் சம்பந்தப்பட்ட இடத்தில் கழராத வண்ணம் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) வெளிநாட்டு ஊடகவியலாளர் ஊடக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பில் மேலும் தகவல்களை உறுதிசெய்து கொள்வதற்கு தேவை என உணரப்படும் பட்சத்தில் அவ்வாறான விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டபின்னரே ஊடக அடையாள அட்டைவழங்கப்படுவது குறித்து தீர்மானிக்கப்படும்.

* **தற்காலிகம்**

செய்தி மற்றும் நடப்பு முக்கியத்துவம் மிக்கவிசேட சந்தர்ப்பங்கள் தொடர்பில் செய்தி சேகரித்தல் மற்றும் செய்தி பெறுமதியைக் கொண்ட தொகுப்பு நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக இலங்கைக்கு வரும் வெளிநாட்டு ஊடக வியலாளர்களுக்கு தற்காலிக ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

*தேவையான கடித ஆவணங்கள்*

(i) விண்ணப்பதாரர் தமது ஊடக நிறுவனத்தில் கடமையாற்றுவதாக சம்பந்தப்பட்ட வெளிநாட்டு ஊடக நிறுவனத்தின் தலைமை அதிகாரியினால் உறுதிசெய்யப்பட்டகடிதம்;

(ii) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட கடிதம்;

(iii) செல்லுபடியான கடவுச்சீட்டு;

(iv) ஆறு மாதகாலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட 1x1½inch (2.6cmx3.7cm) அளவிலான இரண்டு நிறப் புகைப்படங்கள் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிப்பதுடன் இதில் ஒரு புகைப்படத்தை விண்ணப்பப் படிவத்தில் குறித்த இடத்தில் கழராத வண்ணம் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்;

(v) கடவுச்சீட்டு புகைப்படம் இதற்காக பயன்படுத்தப்படமாட்டாது.

**பொது நிபந்தனை**

01. 2021 ஆம் ஆண்டுக்கான ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்காக விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் பணி 2021 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 28 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அன்றைய தினத்திற்கு பின்னர் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

02. மாதாந்த வெளியீட்டுக்கான ஊடக அடையாளஅட்டைகள் ஆகக்கூடிய வகையில் மூன்று மற்றும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் வெளியீட்டுக்காக ஆகக்குறைந்தது இரண்டு ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

03. மூன்று மாத, ஆறு மாத அல்லது வருடாந்த சஞ்சிகைகளுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

04. சம்பந்தப்பட்ட சஞ்சிகை/வெளியீடு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவதாக உறுதிசெய்வதற்காக சமீபத்தில் முறைப்படி வெளியிடப்பட்ட சம்பந்தப்பட்ட வெளியீடுகளின் தொடர்ச்சியான 6 வெளியீடுகள் மற்றும் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும்.

05. அனைத்து சஞ்சிகைகள்/ வெளியீடுகளுக்கும் பத்திரிகை சபையினால் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

06. ஏதேனும் பத்திரிகையுடன் வெளியிடப்படும் சஞ்சிகை/வெளியீடு மேலதிக வெளியீடு தனியான பத்திரிகையாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்தோடு இந்த மேலதிக வெளியீட்டுக்காக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் ஊடகவியலாளருக்கு சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தின் பெயரில் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

07. ஊடக நிறுவன சேவையில் இருந்து நீக்கப்படும்/வெளியேறும் ஊடகவியலாளர்களின் அடையாள அட்டைகளை மீளப் பெற்றுக்கொண்டு அரசாங்க தகவல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பது நிறுவன தலைமை அதிகாரியின் பொறுப்பாகும். அவ்வாறே மீள ஒப்படைக்கப்படாமல் அதற்குப் பதிலாக வேறு ஒரு நபருக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

இதேபோன்று இந்த ஊடக அடையாள அட்டையை அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்காமல் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்/தொழில் வல்லுநர் வேறு ஒரு ஊடக நிறுவனத்தில் அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தால் புதிய அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

08. சினிமா/தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம் போன்ற இசை நிகழ்ச்சிதுறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

09. விளம்பரம் மற்றும் பிரச்சார நிறுவனங்கள் மற்றும் காணொளி தயாரிப்பு நிறுவனங்களுக்காக ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படமாட்டாது.

10. காணாமல் போன ஊடக அடையாள அட்டைகளுக்கு பதிலாக மீள அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளும் பொழுது அந்த காணாமல் போன அடையாள அட்டை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தினால் வழங்கப்படும் பொலிஸ் அறிக்கையை உறுதி செய்து அதன் முதல் பிரதியுடன் பணியாற்றும் நிறுவனத்தின் மூலம் ஊடக அடையாள அட்டையை மீள வழங்குமாறு அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

11. புனைபெயரின் கீழ் செய்தி/விசேட ஆக்கம்/நிகழ்ச்சிகளை சமர்ப்பிக்கும் ஊடகவியலாளருக்கு அந்த புனைபெயரில் ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

12. செய்தி மற்றும் நடப்பு சம்பவங்களை அறிக்கையிடாத ஊடக நிறுவனங்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

13. வெவ்வேறான துறைகளுக்காக வெளியிடப்படும் கைந் நூல் (Guide Books) அல்லது செய்தி மற்றும் நடப்பு விவகார தகவல்களின் அப்பால் வெளியீடுகளுக்காக ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படமாட்டாது.

14. இந்த ஊடக அடையாள அட்டையை ஊடக அலுவல்களுக்காக மாத்திரம் பயன்படுத்தவேண்டும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் முறைகேடாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பாகவோ அல்லது ஊடக கோட்பாட்டு விதிகளுக்கு அப்பால் செயற்படுதல் போன்ற சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் வெளியானால் ஊடக அடையாள அட்டையை இரத்துசெய்தல் அல்லது அந்த ஊடக அடையாள அட்டையை அரசாங்க தகவல் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பிப்பதற்கான அதிகாரம் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளருக்கு உண்டு.

15. நிறுவனம்/அலுவலக ஊடகவியலாளருக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது வருடத்தில் ஒரு முறை மாத்திரமே ஆகும். சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தினால் அடிக்கடி முன்வைக்கப்படும் கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்தோடு அவ்வாறான கோரிக்கை நிராகரிக்கப்படும்.

16. முகாமைத்துவ சேவை அதிகாரி/இணைப்பாளர் போன்ற நேரடி ஊடக தொகுப்பாளர் அல்லாத பதவி வகிப்பவர்களுக்கு ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படமாட்டாது.

17. கௌரவ பெயர் மற்றும் கல்வித் தகைமையுடனான பெயர் குறிப்பிடப்படமாட்டாது. அத்தோடு அடையாள அட்டையில் ஊடக வியலாளரின் பெயர் மாத்திரமே குறிப்பிடப்படும்.

18. அரசாங்க அமைச்சு, திணைக்களம் மற்றும் இணைப்பு நிறுவனங்களில் நிறுவன இணையத் தளங்களுக்கான ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

19. கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்துக்கான ஊடக அடையாளஅட்டையை வழங்குவதை கவனத்திற் கொள்வதற்காக அந்த தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக ஆகக்குறைந்தது வாரத்தில் 05 செய்தி மற்றும் நடப்புவிவகார நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டிருக்க வேண்டும். இந்த தேவையை பூர்த்திசெய்துள்ள கேபிள் தெலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பிரிவுக்காக மாத்திரம் ஒரு மொழியிலான ஊடகத்திற்காக தலா 2 வீதம் ஆகக்கூடியது 6 க்கு உட்பட்டதாக ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படும். ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்காக இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்தல் ஆணைக்குழு மற்றும் ஊடக அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட கேபிள் தொலைக்காட்சி சேவைக்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரசான்றிதழின் பிரதி உறுதி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

20. இந்த ஊடகஅடையாளஅட்டையை வழங்குவது தொடர்பாக இறுதித் தீர்மானம் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை கொண்டுள்ளதுடன் மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தேவையானவை காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றும் அதிகாரம் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை சார்ந்ததாகும்.

21. தனிப்பட்ட விருப்பத்தை பூர்த்தி செய்யும் நோக்கில் அச்சு அல்லது இலத்திரனியல் அல்லது இணையத்தளம் அல்லது ஊடக அடையாள அட்டையை பயன்படுத்துவது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பட்டால் அது தொடர்பில் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களின் அடையாள அட்டையை செல்லுபடியற்றதாக்கும் முழுமையான அதிகாரம் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை சார்ந்ததாகும்.

**நாலக்க கலுவெவ,**
அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
கிருலப்பனை எவனியு,
கொழும்பு 05,
2020, திசெம்பர் 08.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.